Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 05.07.2026 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : செங்கேணி பழனி**

**தேதி : 05.07.2026 – ஞாயிற்றுக்கிழமை          நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி குஜராத் மாநிலம், சனந்த் நகரில் அமைந்துள்ள செமி கண்டக்டர் ஆலையை திறந்து வைத்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்தோனேஷியா- ஆஸ்திரேலியா- மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு 6 நாள் அரசு முறை பயணமாக நாளை புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

நாட்டின் ராணுவத் தளவாட உற்பத்தி 38 ஆயிரம் கோடி ரூபாயை எட்டி சாதனை படைத்திருப்பதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இன்று காலை புதுடெல்லியில் நடைபெற்ற 80ஆவது ஃபிட் இண்டியா சண்டே சைக்ளோத்தான் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

## மோடி குஜராத் (17)

பிரதமர் திரு. நரேந்திர மோடி குஜராத் மாநிலம், சனந்த் நகரில் அமைந்துள்ள செமி கண்டக்டர் ஆலையை நேற்று திறந்து வைத்தார். தொடர்ந்து, அங்கு பணிபுரிந்த ஊழியர்களுடன் அவர் கலந்துரையாடினார். அந்த தருணம் மிகவும் நெகிழ்ச்சியானதாக அமைந்தது என்றும் பிரதமர் பதிவிட்டுள்ளார். இக்கலந்துரையாடலில் ஈடுபட்டோர் பெரும்பாலானவர்கள் பெண்கள் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த இளைஞர்களின் ஆற்றல் குறித்து தாம் மிகவும் பெருமைப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், செமி கண்டக்டர் மையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பெரும்பாலானோர் பெண்கள் என்றும் அவர்கள் இந்தியாவின் தொலை தூரப்பகுதிகளைச் சேர்ந்த பழங்குடியின வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ளார். அவர்களின் குறிப்பிடத்தக்க மன உறுதி செமி கண்டக்டர் குறித்து அவர்கள் அறிந்து கொள்வதை உறுதி செய்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். செமி கண்டக்டர் பயணத்திற்கு அது மேலும் வலு சேர்க்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் யுவ சக்தியின் வலிமை கண்டு பெருமிதம் கொள்வோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*மன்சுக் மாண்டவியா (15)*

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இன்று காலை புதுடெல்லியில் ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 80ஆவது ஃபிட் இண்டியா சண்டே சைக்ளோத்தான் நிகழ்ச்சியில் பங்கேற்றார். உடல் தகுதி ஒற்றுமையை ஊக்குவிப்பதன் மூலம், ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். சமூக அளவிலான மிதிவண்டிப் பயணத்தில் பங்கேற்பாளர்களை ஒருங்கிணைப்பது இந்நிகழ்ச்சியின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார். ஃபிட் இண்டியா மிதிவண்டி மற்றும் ஓட்டப் போட்டி முன்னெடுப்பு, கடந்த ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது என்றும், இது உடல் தகுதிக்கான ஒரு செயல்பாடு மட்டுமல்ல என்றும், வரும் 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் கனவு என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தியா ஒரு வளர்ச்சியடைந்த நாடாக மாற வேண்டும் என்றால், ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் ஆரோக்கியமாக இருப்பது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

*பியூஷ் கோயல் (12)*

இந்தியா—கனடா இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பேச்சு வார்த்தை மேற்கொள்ள நாளை வர்த்தகர்கள் குழு கனடா செல்ல உள்ளதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா—கனடா இடையே தடையற்ற வர்த்தக பேச்சு வார்த்தையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சு வார்த்தையை அடுத்த ஆறு மாதங்களில் வர்த்தகர்கள் குழு முடிவு செய்யும் என்றும், அவர் தெரிவித்துள்ளார். இந்தியா—ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சு வார்த்தை ஏற்கனவே நிறைவடைந்து இருப்பதாகவும், இந்த ஒப்பந்தம் அடுத்த ஆண்டு நடைமுறைக்கு வரவுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ் (09)*

அகமதாபாத் மற்றும் மும்பையில் நடைபெற்று வரும் அதிவேக ரயில் நிலையம் வரும் 2029ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும் என மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். ஒரு நாள் பயணமாக குஜராத் மாநிலம், அகமதாபாத்திற்கு வருகை தந்த அவர் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில்வே கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார். பின்னர் அங்கு கட்டுமான பணியாளர்களுடன் கலந்துரையாடினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குஜராத்தில் மேறகொள்ளப்பட்டு வரும் புல்லட் ரயில் திட்டங்களை தாம் ஆய்வு செய்ததாக தெரிவித்தார்.

*ஜெய்சங்கர் (14)*

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அரசுமுறை பயணமாக ரத்தார், பஹ்ரைன், குவைத் மற்றும் ஓமன் நாடுகளுக்கு இன்று சென்றுள்ளார். இந்தப் பயணத்தின் போது, அந்நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களையும் அவர் சந்தித்து இருதரப்பு நல்லுறவுகள் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார். இந்த சந்திப்பின் போது சம்பந்தப்பட்ட நாடுகளுடனான உறவுகள் மேம்படுவதுடன், பிராந்திய உறவுகள் வலுப்படும் என்றும் வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது. இந்த சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு டாக்டர் ஜெய்சங்கர் வரும் 13ஆம் தேதி நியூயார்க்கில் நடைபெறவுள்ள ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலும் பங்கேற்கவுள்ளார். மேலும், ஜூலை 14 மற்றும் 15ஆம் தேதிகளில் இந்தியா—ஐரோப்பா ஒன்றிய கூட்டத்திலும் அவர் பங்கேற்கிறார். அங்கு ஐரோப்பியா மற்றும் பெல்ஜியம் நாடுகளைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர்களையும், டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

*ராஜ்நாத் சிங் (14)*

நாட்டின் ராணுவத் தளவாட உற்பத்தி 38 ஆயிரம் கோடி ரூபாயை எட்டி சாதனை படைத்திருப்பதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், பாதுகாப்பு உபகரண உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். கடந்த 2013 மற்றும் 2014ஆம் ஆண்டில் வெறும் 686 கோடி ரூபாயாக இருந்த பாதுகாப்புத் தளவாட ஏற்றுமதி தற்போது 57 மடங்கு அதிகரித்து இருப்பதாக தெரிவித்துள்ளார். குறிப்பாக, இந்தியாவில் தயாரிக்கப்படும் ராணுவ உபகரணங்கள் மீது உலக நாடுகளின் நம்பிக்கை அதிகரித்து வருவதாகவும், அவர் தெரிவித்துள்ளார். கடந்த நிதியாண்டில் முன் எப்போதும் இல்லாத வகையில் ராணுவ தளவாட உற்பத்தி 1 லட்சத்து 78 ஆயிரம் கோடியை எட்டியதாகவும் அவர் தெரிவித்தார். இது கடந்த 2014-15ஆம் ஆண்டுகளை ஒப்பிடும் போது 3 மடங்கு அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

*பிரதமர் பயணம் -1 (04)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி 6 நாள் அரசு முறை பயணமாக இந்தோனேஷியா- ஆஸ்திரேலியா- மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு நாளை புறப்பட்டுச் செல்லவுள்ளார். தனது சுற்றுப் பயணத்தின் முதல்கட்டமாக இந்தோனேஷியாவிற்கு அவர் செல்லவுள்ளார்.. இது குறித்து கூடுதல் தகவல்கள்….

(வாய்ஸ்)

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 8ஆம் தேதி ஆஸ்திரேலியா செல்கிறார். பின்னர் இந்தியா—ஆஸ்திரேலியா வருடாந்திர உச்சி மாநாட்டிலும் அவர் பங்கேற்கிறார். இதனிடையே ஆஸ்திரேலியாவிற்கு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடியை வரவேற்பதாக அந்நாட்டின் பிரதமர் திரு. அந்தோணி அல்ஃபானிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஆஸ்திரேலிய பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், உலகின் 4ஆவது பெரிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம் என்ற வகையில் இந்தியா, ஆஸ்திரேலியாவிற்கு ஒரு முக்கிய பொருளாதார கூட்டாளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா—இந்தியா இடையிலான உறவு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்தக் கூட்டாண்மை இந்தோ—பசிபிக் பிராந்தியத்தின் அமைதி தன்மை மற்றும் செழிப்பை வளர்க்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பிரதமர் பயணம் -2 (04)*

இந்தியா—ஆஸ்திரேலியா உறவுகளை மேலும் வலுப்படுத்த வருடாந்திர உச்சி மாநாட்டில் இரு நாட்டுத் தலைவர்களும் மெல்போர்னில் சந்திக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பாண்டவணி தீஜன் பாய் (14)*

சத்தீஷ்கர் மாநிலத்தின் புகழ்பெற்ற பாண்டவாணி பாடகியும், பத்ம விபூஷண் விருது பெற்றவருமான தீஜன் பாய் இன்று காலமானார். அவரது மறைவுக்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். இது குறித்து குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தீஜன் பாய் தனது சக்தி வாய்ந்த குரல், கம்பீரமான தோற்றம் மற்றும் தனித்துவமான பாணியால் மகாபாரதக் கதைகளுக்கு மேடையில் உயிரூட்டியதாக தெரிவித்துள்ளார். மேலும், அவர் தனது அபாரமான திறமை, அர்ப்பணிப்பு மற்றும் பல ஆண்டு கால பயிற்சியின் மூலம் சத்தீஷ்கர் மாநிலத்தின வளமான பாண்டவாணி பாரம்பரியத்திற்கு இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அங்கீகாரத்தை பெற்றுத் தந்ததாக தெரிவித்துள்ளார். இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தைப் பரப்புவதில் அவரது பங்களிப்பு என்றும் நிலைத்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த பாரதம், ஜி.ராம்.ஜி மற்றும் ஆஜீவிகா போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்கு முதல் தவணையாக மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் மாநிலங்களுக்கு 25 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தவணையை வெளியிட்டுள்ளார். இது குறித்து மேலும் சில தகவல்கள்…

(வாய்ஸ்)

*சிவராஜ் சிங் -2 வாய்ஸ் (17)*

(வாய்ஸ்)

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்களுடன் மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இத்திட்டத்தின் மூலம், 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், மாநிலங்களில் போதுமான நிதி இருப்பதை உறுதி செய்வதே இத் தவணைத் தொகையின் நோக்கம் ஆகும். தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாத திட்டத்தில் இருந்து, வளர்ச்சியடைந்த பாரதம் ஜி.ராம்.ஜி. சட்டம் வெற்றிகரமாக மாற்றப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை செயல்படுத்த 3 ஆண்டுகளுக்கு மேல் ஆனது என்றும், ஆனால் வளர்ச்சியடைந்த பாரதம் ஜி.ராம்.ஜி. திட்டம், நாடுமுழுவதும் ஒரே நாளில் செயல்படுத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். மேலும் இத்திட்டத்தை செயல்படுத்த அடுத்த 5 ஆண்டுகளில் 2.86 லட்சம் பஞ்சாயத்துகளில் 7.5 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்யப்படும் என்றுமெ அமைச்சர் தெரிவித்தார். வளர்ச்சியடைந்த பாரதம் ஜி.ராம்.ஜி திட்டத்தின் கீழ் ஊதிய விகிதங்கள் சராசரியாக 10 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

*ஹர்தீப் சிங் புரி - (10)*

பெட்ரோலுடன் எத்தனால் கலப்பது என்பது கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ளதாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங்புரி தெரிவித்துள்ளார். ராஜஸ்தான் மாநிலத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், மத்திய அரசின் உயிரி எரிபொருள் கலப்பு குறித்து ஆக்கப்பூர்வமான யோசனைகள் வரவேற்கப்படுவதாக தெரிவித்தார். அதன்படி தேவையான திருத்தங்களை மேற்கொள்ள தாம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். பெட்ரோலுடன் எத்தனாலை கலப்பது என்பது தமது கருத்து அல்ல என்றும், இந்த முயற்சி முந்தைய காங்கிரஸ் அரசு காலத்திலேயே தொடங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

*புதுச்சேரி செவிலியர் தேர்வு - (08)*

புதுச்சேரியில் இன்று காலை சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இயக்ககத்தில் செவிலியர் தேர்வுகள் வாரியம் சார்பில் பொதுத் தேர்வு நடைபெற்றது. இன்று காலை புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் ஆகிய பகுதிகளில் 9 தேர்வு மையங்களில் நடைபெற்ற இத்தேர்வில் சுமார் 457ஆண் தேர்வர்களும், ஆயிரத்து 157 பெண் தேர்வர்களும் பங்கேற்றனர். 299 தேர்வர்கள் நுழைவுத் தேர்வில் பங்கேற்கவில்லை என மாநில மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் டாக்டர் செவ்வேள் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

*மாஹே – 1 (08)*

புதுச்சேரி பகுதி மாஹேயில் கழிவு இல்லாத மாஹே என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் மாஹே தொகுதியின் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் இன்று தூய்மை இயக்கம் நடைபெற்றது. இந்த இயக்கத்தை மாஹே சட்டமன்ற உறுப்பினர், வழக்கறிஞர் திரு. அசோக் குமார் தொடங்கி வைத்தார். மாஹேயின் அனைத்துப் பகுதிகளையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்றும் தொற்று நோய் பரவுவதை தடுக்க உதவ வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

*மாஹே – 2 (03)*

புதுச்சேரி பகுதி மாஹேயில் பா.ஜ.க. சார்பில் ஒருநாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த பயிற்சி முகாமை பாஜக கேரள மாநில பொதுச் செயலாளர் திரு. ரமேஷ் தொடங்கி வைத்தார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி குஜராத் மாநிலம், சனந்த் நகரில் அமைந்துள்ள செமி கண்டக்டர் ஆலையை திறந்து வைத்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்தோனேஷியா- ஆஸ்திரேலியா- மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு 6 நாள் அரசு முறை பயணமாக நாளை புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

நாட்டின் ராணுவத் தளவாட உற்பத்தி 38 ஆயிரம் கோடி ரூபாயை எட்டி சாதனை படைத்திருப்பதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இன்று காலை புதுடெல்லியில் நடைபெற்ற 80ஆவது ஃபிட் இண்டியா சண்டே சைக்ளோத்தான் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM/PS/VM Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 05.07.2026 / Script**